26th April 1960]

SRI M. P. SUBRAMANIAM : மின்சார போர்ட் ஆட்டானமஸ் போர்டு என்ற முறையில் இருந்தாலும், நம்முடைய அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் தான் இருந்து வருகிறது. ஆகவே மின்சார தொழிலாளர்கள் பெடரேஷன் மின்சார போர்டோடு செய்து கொண்ட ஒப்பந்தம் ஏன் நிறைவேற்றப்படவில்லை. அவைகளின் பேரில் ஏன் ஓராண்டு காலமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை, அதோடு இதைப்பற்றி அரசாங்கம் ஏன் மின்சார போர்டுக்கு தாக்கீது அனுப்ப முடியவில்லை ?

THE HON. SRI R. VENKATARAMAN : நம்முடைய ராஜ்யம் இயங்குவது ஒரு "ரூல் ஆப் லா" முறையில் தான். சர்க்கார் முதலீடு கொடுத்திருந்தாலும் தனியார் நடத்துவதாக இருந்தால் அது தனியான ஒரு கார்ப்பரேஷனாகத்தான் இருக்கும். சர்க்கார் முதலீடு போட்டிருக்கிறோம் என்பதற்காக இம்மாதிரியான கார்ப்பரேஷன் மீது எந்த விதமான உத்தரவையும் போட்டுவிட முடியாது. இரண்டாவது, ஒப்பந்தத்தை நிர்வாகம் மீறியிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. அதுவே சந்தேகம் தான். யார் உண்மையில் மீறியிருக்கிறார்கள் என்பதை பரிசீலனை செய்து தான் முடிவு செய்யவேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : எலக்ட்ரிஸிட்டி போர்ட் சட்டப்படி தனியாக இயங்கக்கூடிய ஒரு நிறுவனம் போன்றதுதான் என்றும், நம்முடைய ஆட்சியும் சட்டப்படி தான் அமைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அப்படியானால் தனியார்கள் இது போன்ற விஷயத்தில் எவ்வளவு காலம் கடத்தினால் என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்குமோ, அதே முறையில் காலம் கடத்திக் கொண்டிருக்கின்ற இதன் மீதும் லேபர் டிபார்ட்மென்ட் குறுக்கிட்டு இதை அட்ஜூடிகேஷனுக்கு விடுவதற்கு அரசாங்கம் ஏன் முயற்சி எடுக்கக்கூடாது ?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் எந்த சமயத்தில் எந்தெந்த தொழில் தகராறுகளை எல்லாம் அட்ஜூடிகேஷனுக்கு விட வேண்டும் என்று நினைக்கிறதோ அப்போது அட்ஜூடிகேஷனுக்கு விடும். அதல்லாமல் திடீரென்று இவைகளை எல்லாம் அட்ஜூடிகேஷனுக்கு விடப்படும் என்று சொல்லுவதற்கில்லை. அடுத்தபடியாக இந்தத் தொழில் தகராறு சம்பந்தமாக பெப்ரவரி மாதத்தில் சர்க்கார் சிபாரிசுகள் செய்திருக்கிறார்கள். அதை தொழிலாளர்கள் தெரிந்திருந்தும் கூட ஏன் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்பது தான் தெரியவில்லை.

SRI N. K. PALANISAMI : இப்போது இந்த வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருவதால், சர்க்கார் இதில் தலையிட்டு சமரசத்தை உண்டாக்குவதற்கு ஏன் முயற்சி செய்யக்கூடாது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு அங்கிருக்கின்ற தொழிற்சங்கம் சம்பந்தப்பட்ட இலாகாவினரை அணுகினால் அதற்கான முயற்சிகள் செய்யப்படும்.

MR. SPEAKER: Questions are over.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO THE FAILURE OF GOVERNMENT TO DEEPEN THE WELLS DRIED UP IN PARTS OF ERODE TALUK.

MR. SPEAKER: The hon. Member, Sri N. K. Palanisami, will now call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance.

SRI N. K. PALANISAMI: Sir, I rise to call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, viz., the failure of the Government to take steps to deepen the wells which have dried up due to continuous drought in Uthukuli and a part of Perundurai and Chennimalai firkas of Erode taluk.

கனம் சபாநாயகர் அவர்களே 1959-ம் வருஷம் ஜூன் மாதத்தில் இதே மாதிரி ஒரு பெரிய கஷ்டமான நிலைமை, அதாவது குடித் தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டது. அப்போது ஈரோடு, பல்லடம், தாராபுரம் போன்ற பகுதிகளில் இந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்காக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அப்போது அங்கு இருந்த கிணறுகளில் எட்டு அடிக்கு மேல் ஆழப்படுத்தக்கூடாது என்று லிமிட் போட்டிருந்தார்கள். இதனால் அதிகப்படியாக தண்ணீர் கிடைக்கவில்லை. இப்போதும் இந்த இடங்களில் எல்லாம் முன் ஏற்பட்ட நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. மழை பெய்யாததின் காரணமாக அங்கு குடித் தண்ணீர் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த இடங்களில் எல்லாம் கொஞ்சம் பணம் செலவு செய்து அங்குள்ள கிணறுகளை எல்லாம் ஆழப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு பல இடங்களிலிருந்தும் குடித் தண்ணீர் கிடைக்காததின் காரணமாக அங்குள்ள மக்கள் ஊரை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த அபாயத்தைத் தடுக்க வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்க வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தின் மூலமாக சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

* **The Hon. Sri M. A. MANICKAVELU:** In June 1959, acute water scarcity was prevailing in Erode, Dharapuram, Palladam and Udumalpet taluks of Coimbatore district and it became necessary to deepen a large number of public wells in these taluks. The Collector of Coimbatore started the work in anticipation of the sanction of the Government and appointed three Minor Irrigation Overseers to facilitate the quick preparation of the estimates, etc. In all, 469 works were taken up and 215 of these works were in Erode taluk. The number of wells which dried up in Uthukuli, Perundurai and Chennimalai firkas of Erode taluk is 162 and all these wells were deepened incurring an expenditure of Rs. 1,16,000. Because of the rains in October 1959, there was some improvement in the supply of water in the wells and it was considered that there was no necessity to deepen all the wells in the taluks according to the programme. There was also widespread rain throughout the district in November 1959. The Government sanctioned an expenditure of rupees two lakhs and ratified the action of the Collector in having started the work in anticipation of the sanction of the Government. The allotment of rupees two lakhs was subsequently increased by Rs. 27,000.

It will thus be seen that the Government have taken necessary measures to deepen the wells dried up due to drought in the firkas referred to in Erode taluk of Coimbatore district.

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1960-61.—*cont*,

DEMAND XVI—EDUCATION.

Mr. SPEAKER: Tomorrow the Assembly will meet in the afternoon also. The time fixed is 3 p.m. at present. I would suggest an alteration. It may meet at 3-30 p.m. Otherwise, Ministers will find it difficult to answer quesions in theCouncil and paricipate in the proceedings here. If I keep it at 3-30 p.m. Ministers will be able to answer questions in the Council and come here a little leisurely. I suggest, therefore, that the Assembly might meet from 3-30 to 5-30 p.m. tomorrow. Is it agreed to ?

The Hon. Sri C. SUBRAMANIAM: Yes, Sir.